


பார்க்கர் பாகிஸ்தானுக்கு வந்துவிட்டான். அங்கே கிழக்காசியக் கதாநாயகனாக முயற்சி செய்துகொண்டிருந்த ரம்ஸி யூசுஃப் என்ன ஆனான்? எப்படி மாட்டிக்கொண்டான்? அவன் போன வழியிலேயே பின்னால் போய்ப் பார்த்தாலொழிய இது புரியாது.

ஒரு விஷயம் நினைவில் வைத்துக்கொள்ளவேண்டும். ரம்ஸி யூசுஃப், தாய்லாந்துக்குப் புறப்படுகிறவரை தனிநபர் தீவிரவாதி. ஒரே ஒரு மாமா சப்போர்ட் மட்டும்தான் அவனுக்கு இருந்தது. ஆனால், அவனது அடுத்த திட்டங்களுக்கு எப்போது அல் காயிதா நிதியும் ஆதரவும் அளிக்க முன்வந்ததோ, அந்தக் கணமே அவன் ஓர் இயக்கத்தின் கண்ணி ஆகிவிட்டான். அல் காயிதாவின் வழக்கப்படி, அவன் போகுமிடமெல்லாம் காற்றில் கரைந்து நின்று அல் காயிதா ஆட்கள் அவனைக் கண்காணித்தபடியே வந்தார்கள். கண்காணிப்பு என்பதற்கு, இந்த இடத்தில் பாதுகாப்பு என்று அர்த்தம். சந்தேகத்துக்கு இடமாக யாராவது உளவாளிகளோ, காவல் துறை அதிகாரிகளோ அவனைப் பின் தொடர்வதாகத் தெரிந்தால், உடனே எங்கிருந்தோ அவன் காதுகளுக்கு சங்கேத எச்சரிக்கை வந்து விழுந்துவிடும். தப்பித்துவிடுவான்.

பாங்காக்கில் ஒரு சமயம் இப்படித்தான் ஆனது. தனது சொந்தத் தயாரிப்பான முதல் குண்டை அங்கேயே ஒரு ஷாப்பிங் காம்ப்ளக்ஸில் வெடிக்கவைத்துப் பரிசோதிக்கலாம் என்று நினைத்து, இடம் பார்க்க அலைந்துகொண்டிருந்தான் ரம்ஸி யூசுஃப். அப்போது ஒரு தாய்லாந்து உளவாளி தன் குடும்பத்துடன் ஒரு ஓட்டலுக்குச் சாப்பிட வந்திருந்தார். உளவாளிக்கு உண்மையில் ரம்ஸி யூசுஃபைத் தெரியாது. அவரது திட்டம், மனைவி மக்களுடன் மசால் தோசை சாப்பிடுவதோ, பாம்பு சூப் சாப்பிடுவதாகவோதான் இருந்திருக்க வேண்டும்.

ஆனால், ரம்ஸி யூசுஃபைப் பின் தொடர்ந்த அல் காயிதா உளவாளிகள், அவன் குறிப்பிட்ட இடத்தை அடைவதற்கு முன்னமேயே அங்கே போய் மோப்பம் பிடித்துவிட்டு, மேதகு தாய்லாந்து உளவுத்துறைக்காரர் அங்கே வந்திருப்பதைப் பார்த்துவிட்டார்கள்.

உடனே சுதாரித்துக்கொண்டு, ரம்ஸி யூசுஃபை நோக்கி விரைந்தது அல் காயிதா பட்சி. கவனிக்கவும். ரம்ஸி யூசுஃபுக்குத் தன்னை அல் காயிதா பின் தொடர்வது தெரியாது. ஏதாவது அபாயம் இருந்தால் எங்கிருந்தாவது எச்சரிக்கை வரும் என்று மட்டும் கேள்விப்பட்டிருந்தான். அத்துடன் சரி. அதுவரை அவனுக்கு அத்தகைய அபாயம் ஏதும் வந்திராததால், அந்தத் தகவல் எப்படி வரும் என்பது தெரியாது.

இந்தக் குறிப்பிட்ட சம்பவத்தின்போது, மேற்படி தாய்லாந்து உளவாளி டிபன் சாப்பிட்டுக்கொண்டிருந்த ஷாப்பிங் காம்ப்ளக்ஸ் கண்ணாடி ரெஸ்டாரண்டிலிருந்து சரியாக ஐம்பதடி நெருக்கத்திலேயே யூசுஃப் வந்துகொண்டிருந்தபடியால், ஓடிப்போய், 'வராதே போ' என்று

சொல்லவோ, பிடித்துத் தள்ளிக்கொண்டு போய்விடவோ அவகாசமில்லை. ஒரு சிறு பரபரப்பு ஏற்பட்டால்கூட, சம்பந்தப்பட்ட உளவாளி திரும்பிப் பார்க்கக் கூடும். கண்ணாடிச் சுவர்தான் குறுக்கே இருக்கிறது. பளிச்சென்று எல்லாம் தெரியும். ஆகவே, அந்த அல் காயிதா பட்சி ஓர் உபாயம் செய்தது.

அந்த ஷாப்பிங் காம்ப்ளக்ஸில் வரிசையாக அணிவகுத்த கடைகளைப் பரபரவென்று நோட்டம் விட்டது. பதப்படுத்தப்பட்ட மீன்கள் விற்கப்படும் ஒரு பணக்காரக் கடை கண்ணில் பட்டது. உடனே அங்கே ஓடிப்போய் ஒரு பாக்கெட் கருவாடு வாங்கி சடாரென்று பிரித்து, கையை உள்ளேவிட்டு நொளப்பியது. போதும். யதேஷ்டம்.

வேகமாக ரம்ஸி யூசூஃப் அருகே வந்த அந்த மனிதன், தெரியாமல் மோதுவது போல அவன் மூக்கருகே தன் கருவாட்டுக் கையை வைத்துத் தேய்த்தான். அப்படியே அவன் பாக்கெட்டில் இரண்டு கருவாடுகளையும் போட்டான்.

ரம்ஸி யூசூஃப் அருவருப்படைய, 'சாரி, சாரி, ரொம்ப சாரி. ஒரு அசம்பாவிதம்.. நான் ஓடிக்கொண்டிருக்கிறேன்' என்று சொல்லிவிட்டுப் பாய்ந்தோடிவிட்டான்.

வினாடி நேரம்தான். அதற்குள் இது நடந்துவிட்டது. ரம்ஸி யூசூஃப், அந்த ஷாப்பிங் மாலில் 'ரெஸ்ட் ரூம் எங்கே?' என்று கேட்டு விசாரித்துக்கொண்டு உள்ளே போய் சட்டை, வாய், மூக்கு எல்லாவற்றையும் கழுவிச் சுத்தம் செய்து முடித்தபோது, மோதியவன் பேசிய ஒரு வரி நினைவுக்கு வந்தது. 'சாரி, சாரி, ரொம்ப சாரி. ஒரு அசம்பாவிதம்.. நான் ஓடிக்கொண்டிருக்கிறேன்.'

சடாரென்று அவன் மண்டையில் ஒரு பொறி தட்டியது. 'நான் ஓடிக்கொண்டிருக்கிறேன்' என்பது, அல் காயிதாவின் சங்கேத வார்த்தைகளுள் ஒன்று. அதற்கு 'நீ ஓடு' என்று அர்த்தம். அதற்குமேல் அவன் ஒரு வினாடி கூடத் தாமதிக்கவில்லை. வெளியே பாய்ந்து, சாலையைத் தாண்டி, ஒரு டாக்ஸி பிடித்துப் போக்குவரத்தில் கரைந்துவிட்டான்.

பாங்காக்கில் ரம்ஸி யூசூஃப் தங்கியிருந்த தினங்களில், இம்மாதிரி மூன்று அல்லது நான்கு சம்பவங்கள் நடந்திருப்பதாகத் தெரிகிறது. ஒவ்வொருமுறையும் அவன் உளவாளிகளின் கண்ணில் படாமல் அல் காயிதாதான் காப்பாற்றியிருக்கிறது.

எப்படியும் தன் பாதுகாப்புக்குப் பிரச்னை வராது என்பது உறுதியாகத் தெரிந்தபிறகுதான், ரம்ஸி யூசூஃப் தன் பரிசோதனைகளை ஆரம்பித்தான். முதல் பரிசோதனை பிலிப்பைன்ஸில்.

பிலிப்பைன்ஸின் தலைநகரம் மணிலாவாக இருந்தாலும், மணிலாவைக் காட்டிலும் அங்கே புகழ்பெற்ற நகரம் ஒன்று உண்டு. அதற்கு செபூ என்று பெயர் (Cebu City). மிகப்பழைமையான நகரம். பிலிப்பைன்ஸின் அதி முக்கியமான துறைமுக நகரமும் கூட. பிலிப்பைன்ஸின் மொத்த கடல் வாணிபத்தில் எண்பது சதவிகிதம் இந்த செபூ துறைமுகத்தின் வாயிலாகத்தான் நடக்கிறது.

தனது பரிசோதனைக்கு இந்த நகரத்தை ரம்ஸி யூசூஃப் தேர்ந்தெடுக்கக் காரணம், பாதுகாப்புதான். துறைமுக நகரம் என்பதால் ஏகப்பட்ட வெளிநாட்டுக்காரர்கள் வந்துபோய்க்கொண்டே இருப்பார்கள். சும்மா முகத்தைப் பார்த்துச் சந்தேகப்பட்டெல்லாம் நிறுத்தி விசாரிக்க மாட்டார்கள். யாரோ வெளிநாட்டு வர்த்தகர் என்று நினைத்துக்கொண்டுவிடுவார்கள் என்பது அவன் கணக்கு.

ஆகவே, தனது சொந்தத் தயாரிப்பான வெடிகுண்டை எடுத்து இடுப்பில் முடிந்துகொண்டு செபூவுக்கு வந்து சேர்ந்தான். முன்பே பார்த்தபடி, அவன் தன் குண்டைப் பரீட்சை செய்து பார்க்கத் தேர்ந்தெடுத்திருந்த இடம் ஒரு ஷாப்பிங் மால். எந்த ஊராக இருந்தாலும் சரி. பெரிய ஷாப்பிங் மாலில் குண்டு வைத்துப் பார்த்தால், அதன் சக்தி என்ன, சாவு எண்ணிக்கை என்ன

என்பது துல்லியமாகத் தெரிந்துவிடும்.

இந்த உத்தேசத்துடன் செபூ நகரத்தில், ஒரு பெரிய ஷாப்பிங் சென்டரைத் தேர்ந்தெடுத்து, அதன் ஜெனரேட் டர் ரூமைத் தேடிக்கொண்டு போய், வாட்ச்மேன் இல்லாத நேரமாகப் பார்த்து ஜெனரேட்டருக்கு அடியில் தன் குண்டை வைத்து, நேரம் செட் பண்ணிவிட்டு மேலே ஒரு கோணியைப் போட்டு மூடிவிட்டு எழுந்து வந்துவிட்டான்.

எத்தனை நேரத்தில் குண்டு வெடிக்க வேண்டும் என்று அவன் நிர்ணயித்திருந்தான் என்று தெரியவில்லை. ஆனால், அவன் அந்த ஷாப்பிங் மாலுக்கு வந்து சென்ற பிறகு, ஒரு மணி நேரம் கழித்துத்தான் அந்த குண்டு வெடித்தது. (பின்னால் ரம்ஸி யூசுஃப் மாட்டிக்கொண்ட பிறகு, விசாரணையின்போது உலகெங்கும் ஆதாரம் திரட்டியதில், அந்த ஷாப்பிங் சென்டரின் ரகசிய கேமராவில் அவன் வருகை தந்து சென்றது நேரத்துடன் பதிவாகியிருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.)

நல்லவேளையாகப் பெரிய பாதிப்புகள் ஏதும் ஏற்படாமல் மிகக் கொஞ்சம் இடிபாடுகளுடன் அந்த காம்ப்ளக்ஸ் தப்பித்தது என்பது ஒருபுறமிருக்க, ரம்ஸி யூசுஃபுக்குத் தன் குண்டுக் கலவை விகிதம் வேலை செய்கிறது என்பது, இந்தச் சம்பவத்தின் மூலம் உறுதியாகிவிட்டது. போதாது? உடனே செபூவிலிருந்து புறப்பட்டு மெட்ரோ மணிலாவுக்குப் போய், அந்தப் பிராந்தியத்தின் ஒன்பது கோடியே தொண்ணூற்று மூன்று லட்சத்து இரண்டாயிரத்து ஐநூற்று அறுபது பேர்களுள் ஒருவனாகக் கரைந்து காணாமல் போய்விட்டான். (இந்த மக்கள்தொகை 2000-ம் ஆண்டுக் கணக்கெடுப்பின் அடிப்படையில்.)

மெட்ரோ மணிலாவில் ரம்ஸி யூசுஃபுக்குச் சில இஸ்லாமிய அடிப்படைவாதிகளின் தொடர்பு ஏற்பட்டிருந்தது. அவர்களில் சிலர் ஜமா இஸ்லாமியா ஆதரவாளர்களாகவும், இன்னும் சிலர் பாலஸ்தீன் விடுதலை இயக்கங்களைச் சேர்ந்தவர்களுடன் தொடர்பு கொண்டவர்களாகவும் இருந்தார்கள். ஆகவே, அவனது பாதுகாப்புக்கு அங்கே எந்தப் பிரச்னையும் இருக்கவில்லை. தனது குண்டு பரிசோதனை வெற்றிகரமாக முடிந்ததில் அவனுக்கு மிகுந்த சந்தோஷம். கைவசம் ஒரு தொழில் இருக்கிறது! குண்டு வைக்க முடியாத அளவுக்கு ஏதாவது பலத்த அடிபட்டால்கூட, உட்கார்ந்த வாக்கில் தயாரித்துப் பிழைப்பை ஓட்டிவிடலாம்.

இப்படித் தமாஷாக நண்பர்களுடன் பேசிக்கொண்டிருந்தபோதுதான், அவனது மெட்ரோ மணிலா நண்பர்கள் ஒரு யோசனையை முன்வைத்தார்கள். அப்போது அமெரிக்க அதிபராக இருந்த பில் க்ளிண்டன், ஆசிய நாடுகளில் கொஞ்சம் நல்லுறவு வளர்த்துவிட்டுப் போகும் உத்தேசத்துடன் நிறைய இடங்களுக்கு வந்து போய்க்கொண்டிருந்தார். (நம்மூருக்குக் கூட வந்து ஜீன்ஸ் பேண்ட் போட்டுக்கொண்டு தாஜ்மகால் முன்பு மனைவியுடன் நின்று போட்டோ எடுத்துக்கொண்டாரே!) அவரது சுற்றுப்பயணத் திட்டத்தில் பிலிப்பைன்ஸும் இருந்தது.

தனது ஐந்து நாள் ஆசியப் பயணத்தின் ஒரு பகுதியாக, 'நவம்பர் 12, 1994 அன்று மணிலாவுக்கு வருவதாக இருந்த க்ளிண்டனைப் போட்டுத்தள்ள முடியுமா?' என்று ரம்ஸி யூசுஃபைக் கேட்டார்கள், நண்பர்கள். கொல்லப் பிறந்த கொடுங்கோலனான யூசுஃப், உடனே உற்சாகமாகிவிட்டான். தனது போப் படுகொலைத் திட்டத்தைக் கொஞ்சம் தள்ளிவைத்துவிட்டு, க்ளிண்டனை ஒரு கை பார்க்கலாம் என்று தீர்மானித்தான். பரபரவென்று கொலை நோட்ஸ் எழுத ஆரம்பித்தான்.

முதல் வழி, க்ளிண்டன் விமான நிலையத்துக்கு வந்து இறங்கி, காரில் சாலை வழியே வரும்போது ஏதாவது ஓரிடத்தில் சக்திமிக்க குண்டை வைத்து வெடிக்கச் செய்வது. இந்தத் திட்டத்தைக் குறித்து சிந்திக்கும்போதே நண்பர்கள் தடுத்துவிட்டார்கள். குண்டு வெடிக்காமல் படுத்தினால், முயற்சி வீண்.

இரண்டாவது வழி, ராணுவ விமானத் தளத்தில் க்ளிண்டனின் விமானம் வந்து இறங்கும்போதே

ஸ்டிங்கர் மூலம் (Stinger Missile தரையிலிருந்து விமானத்தை நோக்கிச் சுடும் இயந்திரத் துப்பாக்கி. அமெரிக்கக் கண்டுபிடிப்பு. ஒரு துப்பாக்கியின் விலை 26,000 அமெரிக்க டாலர்கள்.) சுட்டு வீழ்த்துவது. இது ஓகே என்றாலும் குறி பிசகினால் ஆபத்து என்று இதையும் நிராகரித்துவிட்டார்கள்.

மூன்றாவது வழியாக ரம்ஸி யூசூஃப் சொன்னது, போஸ்ஜீன் (Phosgene) என்கிற ரசாயன ஆயுதத்தைப் பயன்படுத்துவது. கார்பானிக் ஆசிட் டை க்ளோரைட் என்கிற வேதிப்பெயர் கொண்ட இந்த ரசாயன வாயுவுக்கு, (திரவ நிலையிலும் பயன்படுத்தலாம்.) நிறமோ மணமோ கிடையாது. ஒரு கைத்துப்பாக்கி சைஸ் இஞ்செக்ஷன் சிரிஞ்சில் அடைத்துக் குறிபார்த்துச் செலுத்தினால் சத்தமின்றி, ரத்தமின்றி போய் இலக்கைத் தாக்கிவிடும். உடனடி அபாயமும் இல்லை. ரத்தம் சொட்டச் சொட்ட க்ளிண்டன் கீழே விழப்போவதில்லை. தாக்கப்பட்டதே தெரியாமல் மக்கள் கூட்டத்துக்கு டாட்டா காட்டிக்கொண்டிருப்பார். எப்படியும் உயிர்போக இருபத்து நாலு மணிநேரம் ஆகும். அதற்குள் தப்பித்து உலகையே ஒரு வலம் வந்துவிடலாம்.

ஒரு ஆட்டம் ஆடிப்பார்த்துவிடுவது என்று ரம்ஸி யூசூஃப் முடிவு செய்த நேரத்தில், அவனுக்கு அவனது மாமா மூலம் அல் காயிதா மேலிடத்திலிருந்து ஒரு குறிப்பு வந்தது.

“இந்தத் திட்டத்தை மூட்டை கட்டு. க்ளிண்டனை உன்னால் கொல்லமுடியாது. பாதுகாப்பு ஏற்பாடுகள் நீ நினைப்பதுபோல அத்தனை சொத்தையாக இல்லை. நமது பழைய திட்டத்தின்படி போப் ஜான்பாலை முதலில் கவனி. ஆபரேஷன் போஜிங்காதான் உன்னுடைய இப்போதைய ஒரே கவனமாக இருக்க வேண்டும்.”

தன்னுடைய திட்டம், அதுவும் தனது பிரத்தியேக நண்பர்களிடம் மட்டுமே இதுவரை பேசியிருந்த திட்டம், எப்படி சூடானில் இருக்கும் அல் காயிதா மேலிடத்துக்குப் போய்ச் சேர்ந்தது?

அவனுக்குப் புரியவில்லை. நண்பர்கள் தாங்கள் யாரிடமும் இது குறித்தெல்லாம் பேசவே இல்லை என்று சூடம் அணைத்துச் சத்தியம் செய்தார்கள். எனில் எப்படி விஷயம் போயிருக்கும்?

புரியவில்லை என்பதனால் பயந்துவிட்டான். எப்படிப்பட்ட அமைப்பு தனக்குப் பின்னால் இருக்கிறது என்பது முதல்முறையாக அவனுக்குப் புரிந்த தருணம் அது.

உடனடியாக க்ளிண்டனைக் கொல்லும் திட்டத்தை நிறுத்திவிட்டு, போப்பாண்டவர் வருகைக்காகக் காத்திருக்க ஆரம்பித்தான்.